வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந.க.எண்.5175 /அ4/2023 நாள் : .12.2023

| | |
|---|---|
| பொருள் : | பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – நாட்டு நலப்பணித்திட்டம் – 2023 – 2024 ஆம் கல்வி ஆண்டிற்கான அரசு / அரசு உதவி பெறும் மேல்நிலை வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு NSS சிறப்பு முகாம் நடத்துவது – சார்பு |
| பார்வை : | 1.சென்னை.6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் (நாட்டு நலப்பணித் திட்டம்) செயல்முறைகள் ந.க.எண்.045450/எல்/இ1/2023 நாள்.18.12.2023 |

-----

தமிழ்நாடு பள்ளிக் கல்வி துறை கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அரசு / அரசு உதவி பெறும் / சுயநிதி / தனியார் பள்ளிகளில் செயல்பட்டு வரும் நாட்டு நலப்பணித் திட்டம் அமைவின் 2023 – 2024 ஆம் கல்வி ஆண்டிற்கான சிறப்பு முகாமினை எதிர்வரும் அரையாண்டு தேர்வு விடுமுறை நாட்களில் 07 நாட்கள் நடத்திட உரிய திட்டமிடலை மேற்கொள்ள நாட்டு நலப்பணித்திட்ட மாவட்ட தொடர்பு மூலம் திட்ட அலுவலருக்கு அறிவுரைகள் வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**சிறப்பு முகாமில் பின்பற்ற வேண்டியவை :**

1. சிறப்பு முகாம் 7 நாட்கள் தூய்மைப் பணியில் இளைஞர்கள் என்ற தலைப்பில் நடத்தப்பட வேண்டும்.

2. இம்முகாமில் 25 மாணவர்கள், 2 ஆசிரியர்கள் மற்றும் 3 மாணவர்கள் அல்லாத இளைஞர்கள் ஆக 30 பேர் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

3. இம்முகாமில் மாணவரல்லாத இளைஞர்களை கண்டிப்பாக சேர்க்க வேண்டும். முகாமில் பங்கேற்கும் மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து மறுப்பின்மை சான்றிதழ் ( No objection Certificate) பெற்ற பின்னரே முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட வேண்டும்.

4. முகாம் நடத்தப் பெறும் இடம் பள்ளியிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாகவும், 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு குறைவாகவும் இருக்க வேண்டும். அந்தந்த அமைவின் தத்தெடுப்பு கிராமத்தில் மட்டுமே சிறப்பு முகாம் நடத்தப்பட வேண்டும்.

5. முகாமில் கலந்து கொள்ளும் மாணவர்கள் எவரும் எக்காரணத்தைக் கொண்டும் முகாமைவிட்டு வெளியே செல்லக் கூடாது.

6. முகாம் அழைப்பிதழில் இடம் பெறும் பெயர்கள், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செ.மு.ந.க.எண்.68773/டபிள்யு16/2005 நாள்.21.07.2005 இன்படி முழுவதும் தமிழில்தான் இருத்தல் வேண்டும்.

7. தத்தெடுப்பு கிராம மக்கள் பயனடையும் வகையில் பொது மருத்துவ முகாம்கள் சிறப்பு முகாமில் இடம் பெற வேண்டும்.

8. முகாம் தொடங்கியதற்கான விவரம், முகாம் நடத்தி முடிக்கப்பட்ட விவரம் ஆசியன உய காலத்தில் இவ்வலுவலகத்திற்கும் மாவட்ட தொடர்பு அலுவலருக்கும் தெரிவிக்க வேண்டும்.

9. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் உதவியோடு கிராமப்புற முழுச் சுகாதார திட்டத்தை செயல்படுத்த வேண்டும். மேலும் கிராமப்புற தூய்மையை சிறப்பாக செயல்படுத்துமாறு முகாம் அமைத்திடல் வேண்டும்.

10. 7 நாள் சிறப்பு முகாமில் நாள்தோறும் சிறந்த கருத்துரையாளர்களை அழைத்து மாணவத் தொண்டர்களின் தலைமைப் பண்பு, ஆளுமைப் பண்பு வளரும் வகையில் சிறப்பு முகாமை அமைத்திடல் வேண்டும்.

11. சிறப்பு முகாமில் மரக்கன்றுகள் நடுதல் திட்டம் இடம் பெற வேண்டும்.

12. முகாம் நடத்துவதற்குரிய செலவினத் தொகை ரூ.11,250/- யினை பள்ளியில் பரிவர்த்தனை செய்யப்படும் பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து முன் பணமாக உரிய தீர்மானம் நிறைவேற்றி தற்காலிகமாக பெற்று கொள்ளலாம். மேலும் பள்ளிக் கல்வி ஆணையரகத்திலிருந்து தொகை பெற்றதும் உரிய தலைப்பில் உடன் திருப்பி செலுத்தப்பட வேண்டும்.

13. முகாம் முடித்த 10 தினங்களுக்குள் முகாமிற்கான செலவினங்கள் தணிக்கை செய்யப்பட்டதற்குரிய முழுமையான செலவின அறிக்கை மற்றும் சிறப்பு முகாமிற்கான தணிக்கை அறிக்கையின் உண்மை நகலின் இரு பிரதிகளை மாவட்ட தொடர்பு அலுவலர் வழியாக சமர்பிக்க வேண்டும்.

14. மாணவர்கள் தங்கும் இடங்களில் முழுமையாக பாதுகாப்பான முறையில் உள்ளது என்பதை உறுதி செய்தல் வேண்டும். மாணவர்கள் தங்குமிடம், சமையல் இடம், கழிப்பிடம் மற்றும் குடிநீர் குறித்த வசதிகள் உள்ளிட்டவைகளை அவசியம் கருத்தில் கொள்ள வேண்டும்.

15. மாணவர்கள் தங்குமிடம் திறந்த நிலை கிணறு, நீர்நிலைகள், குளம், ஏரி போன்றவற்றிக்கு அருகில் இல்லாதவாறு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் திட்ட அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

16. முறையான அனுமதியின்றி மாணவர்களை முகாமிலிருந்து வெளியில் செல்ல அனுமதிக்க கூடாது.

17. மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், பாதுகாப்பிற்கு அச்சுறுத்தக் கூடிய எந்த பணியிலும் மாணவர்களை ஈடுபடுத்த கூடாது.

// ஒப்பம் //

// செ.மணிமொழி//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

மாவட்ட தொடர்பு அலுவலர், ( சார்ந்த திட்ட அலுவலர்களுக்கு)

நாட்டுநலப்பணித் திட்டம்,

வேலூர் மாவட்டம்.

நகல்.

1.சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,

2.அனைத்து திட்ட அலுவலர்கள் (தலைமையாசிரியர்கள் வழியாக)